# 3

# பிள்ளைக்கான உதவித் தொகை

TML 003/**2018**

ஒன்ராறியோவில் உள்ள பெண்களுக்கான குடும்பச் சட்டம்



## எல்லோரும் பெண்கள். ஒரு குடும்பச் சட்டம்.

உங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளுங்கள்.

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

# பிள்ளைக்கான உதவித் தொகை

*இந்தச் சிறுநூல் சட்டம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படையான ஒரு விளக்கத்தை உங்களுக்குத் தரும் நோக்கத்துடன் ஆக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட முறையிலான சட்ட ஆலோசனை மற்றும் உதவி என்பவற்றுக்கு இணையான ஒரு மாற்றீடாக இதனைக் கருத முடியாது. குடும்பச் சட்டம் தொடர்பிலான பிரச்சினைகளை நீங்கள் எதிர்கொள்ளும் பொழுது உங்கள் தெரிவுகளைப் புரிந்து கொள்வதற்கும் உங்கள் உரிமைகளைக் காப்பதற்குமாக, உங்களால் முடிந்த அளவு விரைவாக சட்ட ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளுங்கள். குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைக் கண்டறிவது மற்றும் கட்டணமாக செலுத்துவது பற்றிய மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு "உங்கள் குடும்பச் சட்டப் பிரச்சினைக்கு உதவி பெறுதல்" என்ற எமது சிறுநூலைப் படியுங்கள். எமது இணையத்தளமான www.onefamilylaw.ca என்பதில் உள்ள "குடும்பச் சட்ட சட்டத்தரணி ஒருவரைத் தேடுதல்" மற்றும் பிள்ளைக்கான உதவித்தொகை பற்றிய எங்களுடைய வலைய கருத்தரங்குகளைப் (webinars) பார்வையிடுவதும் உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும்.*

தனது பெற்றோர் இருவரிடம் இருந்தும் நிதிரீதியான உதவியைப் பெறும் உரிமை ஒரு பிள்ளைக்கு இருக்கின்றது. நீங்களும் பிள்ளையின் மற்றப் பெற்றோரும் ஒன்றாகச் சீவிக்கவில்லை என்றால், உங்களுடைய பிள்ளையைப் பராமரிக்கும் செலவினை நீங்கள் இருவரும் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்.

பின்வரும் நிலைமைகளில் கூட, அனேகமான நேரங்களில், பெற்றோர் தமது பிள்ளையைப் பொருளாதார ரீதியாக ஆதரிக்க வேண்டும்:

- பிள்ளையுடன் அவர்கள் வசிப்பதில்லை;
- பிள்ளையை அவர்கள் சந்திப்பதில்லை; தகுந்த காரணம் இல்லாமல் பிள்ளை பெற்றோரை நிராகரிக்கும் அரிதான சந்தர்ப்பங்கள் தவிர்ந்தவை;
- பிள்ளையின் மற்றப் பெற்றோரைத் திருமணம் செய்திருக்கவில்லை; அல்லது
- பிள்ளையின் மற்றப் பெற்றோருடன் ஒருபோதும் வசிக்கவில்லை.

பெரும்பாலான நேரம் உங்களுடைய பிள்ளை உங்களுடன் சீவிக்கின்றார் என்றால் அது பிள்ளையின் **முதன்மையான குடியிருப்பு** எனப்படும், அத்துடன் அப்பிள்ளையின் மற்றப் பெற்றோரிடம் இருந்து **பிள்ளைக்கான உதவித் தொகையினை** பெறும் உரிமை உங்களுக்கு இருக்கிறது. நீங்கள் **பணம் பெறுபவராக** இருக்கிறீர்கள். மற்றவர் **பணம் செலுத்துபவர்** என்று அழைக்கப்படுகிறார். பெரும்பாலான நேரத்தில் பிள்ளை மற்றப் பெற்றோருடன் வாழ்கிறார் எனில் உங்களுடைய பிள்ளைக்கான உதவித் தொகையை நீங்கள் செலுத்தவேண்டும்.

பணம் செலுத்துபவர் பிறப்புரீதியான பெற்றோராகவோ அல்லது சுவீகார முறைரீதியான பெற்றோராகவோ இருக்கலாம். ஒரு மாற்றாந்தாய் அல்லது மாற்றாந்தகப்பன் பெற்றோராகச் செயற்பட்டு இருந்தால் அவரும் பிள்ளைக்கான உதவித் தொகையினைச் செலுத்தவேண்டும் என்று எதிர்பார்க்கப்படலாம்.

## பிள்ளைக்கான உதவித் தொகையினை பெறும் வழி

நீங்களும் பிள்ளையின் மற்றப் பெற்றோரும் பிள்ளைக்கான உதவித் தொகைபற்றி உங்கள் சொந்த ஏற்பாடுகளைச் செய்யலாம். உங்கள் இணக்க ஏற்பாட்டினை **திகதி உடன் எழுத்து வடிவில்** செய்வது நல்ல விடயம். **சாட்சி** ஒருவரின் முன் இரண்டு பெற்றோரும் அதில் கையொப்பம் இட வேண்டும். அதனை பெற்றோர் இருவரும் தனித்தனிச் சட்டத்தரணியிடம் காட்டிய பின்னர் நீதிமன்றத்தில் அதனைத் தாக்கல்செய்தல் இன்னும் சிறப்பாகும்.

பிள்ளைக்கான உதவித் தொகை அளவு பற்றி நீங்கள் இணக்கம் காண முடியவில்லை, பிள்ளையின் மற்றப் பெற்றோருடனான உங்கள் உறவுமுறை துன்புறுத்தும் உறவாக இருக்கிறது அல்லது இருந்தது, உங்கள் இணக்க ஒப்பந்தம் முறிந்து விட்டது அல்லது உங்கள் பிள்ளை உங்களுடன் நேரத்தில் ஒரு பகுதியைக் கழிக்கிறது என்றால் பிள்ளைக்கான உதவித் தொகைக்குக் கட்டளையிடும்படி நீதிமன்றத்திடம் நீங்கள் கேட்கலாம். இந்த எல்லா நிலைமைகளிலும் நீங்கள் ஒரு சட்டத்தரணியுடன் கதைப்பது நல்லது

## பெற்றோர் ஒருவர் எவ்வளவு காலத்துக்கு பிள்ளைக்கான உதவித்தொகையினைச் செலுத்த வேண்டும்?

ஒரு பிள்ளை, பெற்றோரின் ஆதரவிலிருப்பவர் ஆக இருக்கும் வரையில், பிள்ளைக்கான உதவித் தொகை கொடுக்கப்படல் வேண்டும். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இதன் அர்த்தம் பிள்ளை ஆகக்குறைந்தது 18 வயதை அடையும் வரை என்பதாகும். ஒரு பிள்ளை 18 வயதை அடைந்த பின்பும் நோய்வாய்ப்பட்டு இருத்தல் அல்லது வலுவிழப்பைக் (disability) கொண்டிருத்தல் அல்லது முழுநேர மாணவராக இருத்தல் போன்ற காரணங்களால் தன்னைத்தானே அப்பிள்ளை ஆதரிக்க முடியாது இருந்தால், பணம் செலுத்துபவர் பிள்ளைக்கான உதவித் தொகையைத் தொடர்ந்து செலுத்தவேண்டி இருக்கலாம். 16 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகள் திருமணம் செய்து கொண்டால் அல்லது வீட்டை விட்டு அகன்று கொண்டால் ஆதரவிலிருப்பவர் என்று கருதப்பட மாட்டார்கள்.

பிள்ளையுடன் பெரும்பாலான நேரம் வாழும் பெற்றோர், மீண்டும் திருமணம் செய்து கொண்டாலும் அல்லது வேறு ஒருவருடன் சேர்ந்து வாழ ஆரம்பித்தாலும் பிள்ளைக்கான உதவித் தொகையினைப் பெறுகின்ற உரிமையைக் கொண்டு இருப்பார்.

## பிள்ளைக்கான உதவித் தொகையின் அளவினை நீதிமன்றம் எப்படித் தீர்மானிக்கிறது?

பணம் செலுத்தும் பெற்றோர் செலுத்த வேண்டிய பிள்ளைக்கான உதவித் தொகையின் அடிப்படை அளவினை மத்திய அரசும் மாகாண அரசும் சேர்ந்து தீர்மானம் செய்கின்றன. ஒவ்வொரு மாகாணத்தினதும் வாழ்க்கைச் செலவின் அளவைப் பொறுத்து இத்தொகைகள் அமையும். எவ்வளவு நிதி வழங்கப்பட வேண்டும் என்று விபரிக்கின்ற **பிள்ளைக்கான உதவித் தொகை வழிகாட்டல் விதிகளுக்கு** (**Child Support Guidelines**) அமைய இவ்வுதவித் தொகைகள் கணிக்கப்படுகின்றன

வழிகாட்டல் விதிகளில் அடங்கியுள்ள **பிள்ளைக்கான உதவித் தொகை அட்டவணையானது** வழங்கப்பட உள்ள அடிப்படைத் தொகையினைத் தீர்மானிப்பதற்கு உபயோகிக்கப்படுகிறது. ஒவ்வொரு மாகாணத்துக்கும், ஆட்சிப்பிரதேசத்திற்கும் வெவ்வேறான அட்டவணைகள் உள்ளன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பிள்ளைக்கான உதவித்தொகை அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நிதித் தொகைகளை பிள்ளைக்கான உதவித் தொகைக் கட்டளைகளை வழங்கும்போது நீதிமன்றம் பயன்படுத்தும்.

வழக்கமாக பயன்படுத்தப்படும் அட்டவணை, பணம் செலுத்துபவர் கனடாவில் எங்கே வாழுகிறார் என்பதன் அடிப்படையில் அமையும். உதாரணத்துக்கு பெற்றோர் இருவரும் ஒன்ராறியோவில் வாழ்ந்தால், ஒன்ராறியோ அட்டவணை பயன்படுத்தப்படும். பணம் செலுத்துபவர் வேறொரு மாகாணத்தில் அல்லது ஆட்சிப் பிரதேசத்தில் வாழ்ந்தால் அந்த மாகாணத்துக்கான அல்லது ஆட்சிப் பிரதேசத்திற்கான அட்டவணை பயன்படுத்தப்படும். பணம் செலுத்துபவர் கனடாவிற்கு வெளியே வசிக்கிறார் என்பதுடன் பிள்ளையைப் பராமரிக்கும் பாதுகாப்பினை பெற்றிருக்கும் பெற்றோர் ஒன்ராறியோவில் வாழ்ந்தால், ஒன்ராறியோவுக்கான அட்டவணை பயன்படுத்தப்படும்.

பணம் செலுத்துபவர் ஒருவர் செலுத்தவேண்டிய அடிப்படைத் தொகை பின்வருவனவற்றின் அடிப்படையில் அமையும்:

- பணம் செலுத்துபவரின் **மொத்த வருடாந்த வருமானம்** (**gross annual income**). இதன் அர்த்தம் வரிகள் மற்றும் கழிப்பனவுகள் என்பன செலுத்தப்படும் முன்பாக

பணம் செலுத்துபவர் எவ்வளவு வருமானம் பெற்றிருந்தார் என்பதாகும், அத்துடன்

- தங்கியிருக்கும் எத்தனை பிள்ளைகளுக்கு ஆதாரம் வழங்கப் பணம் செலுத்துபவர் பொறுப்பாக இருக்கிறார்.

பணம் செலுத்துபவர் சுயதொழில் செய்பவராக அல்லது சொந்தமான வர்த்தகம் வைத்திருப்பவராக இருந்தால், அவர் எவ்வளவு சம்பாதிக்கிறார் என்பது வெளிப்படையாக இராது. பணம் செலுத்துபவர் அவரது வருமானத்திலிருந்து நிறையச் செலவுகளைக் கழிக்கக்கூடும், அல்லது அவருடைய உண்மையான வருமானத்தைக் குறைத்துக் காட்டுவதற்காக தனக்கு அதிக பணம் செலுத்தாமல் இருக்கக்கூடும். பணம் செலுத்துபவர் சுயதொழில் செய்பவராக இருந்தால், அவரது வர்த்தகம் பற்றிய தகவல்கள் உள்ளடங்கலாக அவரது வருமானம் பற்றிய மேலதிக தகவல்களைக் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

பல சந்தர்ப்பங்களில், உதவித்தொகை வழிகாட்டல் விதிகளில் கூறப்பட்டுள்ள அடிப்படைத் தொகையைச் செலுத்தும்படி பணம் செலுத்துபவருக்கு நீதிமன்றம் உத்தரவு இடுகிறது. இருப்பினும், குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் வழிகாட்டல் விதிகளில் இருந்து வேறுபடும் ஓர் உதவித்தொகையை வழங்கும்படி நீதிமன்றம் உத்தரவு இடுவதும் உண்டு. உதாரணமான சந்தர்ப்பங்கள்:

- 18 வயதிலும் கூடுதலாக உள்ள ஒரு பிள்ளைக்கு உதவித்தொகை வழங்கல்;
- பிள்ளை ஒவ்வொரு பெற்றோருடனும் கிட்டத்தட்ட ஒரே அளவு நேரத்தைக் கழித்தல்;
- குறிப்பிட்ட உறவினால் பல பிள்ளைகள் இருப்பதுடன் ஒவ்வொரு பெற்றோருடனும் ஆகக் குறைந்தது ஒரு பிள்ளையாவது வசித்தல், அல்லது;
- பணம் செலுத்துபவருக்கு மிகவும் கூடிய வருடாந்த வருமானம் உண்டு.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீதிமன்றம் உங்கள் குடும்பத்தின் நிலைமையை கருத்தில் எடுத்துக் கொள்ளும். உதவித்தொகையின் அளவு, இரண்டு பெற்றோரினதும் வருமானம் மற்றும் பிள்ளைக்குத் தேவைப்படும் அளவு என்பவற்றைப் பொறுத்து அமையும்.

குழந்தைகளின் பகல்நேரப் பராமரிப்பு, பிள்ளைப் பராமரிப்பு, சில, கல்விக்குப் புறம்பான மற்றும் கல்விக்கான செலவுகள் அல்லது தனியார் அல்லது அரசாங்க ஆரோக்கியக் காப்புறுதித் திட்டத்துக்குள் அடங்காத ஆரோக்கியப் பராமரிப்புச் செலவு

போன்ற **விசேட அல்லது அசாதாரண செலவுகள்** நிமித்தம் பிள்ளைக்கான உதவித் தொகையை நீங்கள் மேலதிகமாகப் பெறக்கூடும். பெற்றோரின் வருமானம் மற்றும் பிள்ளைக்கு தேவைப்படும் அளவு என்பவற்றைப் பொறுத்து விசேட செலவு என்ன என்பது வேறுபடுமாதலால் இந்த மேலதிக செலவுகள் பற்றிச் சட்டத்தரணி ஒருவருடன் கதைப்பது நல்லது.

உங்கள் பிள்ளைக்கு விசேட செலவுகள் இருக்குமானால், நீங்களும் மற்றப் பெற்றோரும் சேர்ந்து அவற்றைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். உங்களில் ஒவ்வொருவரும் செலுத்தும் பணத்தின் அளவு உங்களின் வருமானத்தில் தங்கி இருக்கும்

அரிதான நிலைமைகளின் கீழ் நீதிமன்றம் உதவித் தொகைக்கான அடிப்படைப் பணத் தொகையை குறைக்கவும் கூடும். வழிகாட்டல் விதிகளில் கூறப்பட்ட தொகையைக் கொடுப்பது தனக்கு **அளவுக்கு மீறிய கஷ்டத்தைக்** கொடுக்கும் என்று பணம் செலுத்தும் பெற்றோர் நிரூபிக்க முடிந்தால் மட்டுமே நீதிமன்றம் இவ்வாறு செய்யும். இதன் அர்த்தம் அந்தப் பெற்றோருக்கு அவருடைய சொந்த வாழ்க்கைச் செலவுகளுக்கு பயன்படுத்த பணம் போதாது இருக்கிறது என்பதாகும். உதாரணமாக, பணம் செலுத்துபவருக்கு வலுவிழப்பு இருக்குமானால் அல்லது அவர் ஆதரவிலிருக்கும் வேறு நபர்களுக்கு உதவித் தொகை செலுத்த வேண்டும் என்றால் நீதிமன்றம் உதவித் தொகையின் அளவைக் குறைக்கக் கூடும்.

அளவுக்கு மீறிய கஷ்டம் என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ள முன்பாக, **ஒவ்வொரு வீட்டினதும் வாழ்க்கைத் தரத்தை** ஒப்பிடுவதற்காக இரண்டு வீடுகளிலும் உள்ள குடும்ப **அங்கத்தவர்கள் ஒவ்வொருவரின்** வருமானத்தையும் நீதிமன்றம் பார்க்கும். இதன் கருத்து என்னவென்றால் நீங்கள் அல்லது மற்றப் பெற்றோர் மீண்டும் திருமணம் செய்திருந்தால் அல்லது புதிய ஒரு வாழ்க்கைப் பங்காளருடன் வாழ்ந்து வந்தால் நீதிமன்றம் அதனையும் கருத்தில் எடுத்துக் கொள்ளும்.

வருமான வரி அறிக்கையைப் பதிவு செய்கையில், பணம் செலுத்துபவர் வரிக்கழிப்புக்குக் காட்டும் ஒரு தொகையாக பிள்ளைக்கான உதவித் தொகையை உபயோகிக்க முடியாது. அதேசமயம் பிள்ளைக்கான உதவித் தொகையை உங்களின் வருமானமாக நீங்கள் காட்ட வேண்டியதில்லை.

## உதவித் தொகை ஒப்பந்தம் அல்லது நீதிமன்றக் கட்டளை ஒன்றினை மாற்றமுடியுமா?

நீங்களும் மற்றப் பெற்றோரும் ஏற்கனவே இருந்துவரும் ஒப்பந்தம் ஒன்றை வைத்திருக்கிறீர்கள் என்றால் பிள்ளைக்கான உதவித் தொகையில் மாற்றம் ஏற்படுத்த

வேண்டும் என்று இருவரும் இணங்கிக் கொண்டால் புதியதொரு ஒப்பந்தத்தில் நீங்கள் கையொப்பம் இடலாம். ஏற்கனவே இருந்துவரும் ஒப்பந்தத்தை மாற்றுவது பற்றி நீங்களும் மற்றப் பெற்றோரும் இணங்க முடியவில்லை என்றால், உங்களில் யாராவது ஒருவர் பிள்ளைக்கான உதவித் தொகையின் அளவை மாற்றும் கட்டளை ஒன்றை வழங்கும்படி நீதிமன்றத்தைக் கேட்க முடியும்.

நீதிமன்றக் கட்டளை ஒன்று உங்களுக்கு இருக்கிறது என்றால், பிள்ளைக்கான உதவித் தொகையில் அல்லது ஏற்கனவே இருக்கும் ஒப்பந்தத்தில் உள்ள விடயங்களில் ஏதாவது மாற்றம் ஏற்படுத்துவதற்கு நீதிமன்றத்தை நீங்கள் கேட்க வேண்டும். இது **பிள்ளைக்கான உதவித் தொகை உத்தரவை மாற்றல்** எனப்படும்.

நிலைமை பெரிய அளவில் மாறி இருந்தால் மட்டுமே நீதிமன்றம் உதவித் தொகையின் அளவை மாற்றும். உதாரணமாக, பணம் செலுத்தும் பெற்றோரின் வருமானம் அதிகரித்து விட்டால் அல்லது குறைந்து விட்டால் அல்லது பிள்ளையின் வாழும் முறை ஏற்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டு இருந்தால் அல்லது புதிதாக விசேடசெலவுகள் தோன்றி இருந்தால் உதவித் தொகையில் மாற்றம் செய்யப்படும்.

உதவித் தொகையின் அளவினை நீதிமன்றம் மாற்றுவதற்கு இன்னும் ஒரு காரணம் புதிய வழிகாட்டல் விதிகள் சட்ட அங்கீகாரம் பெறுதல் ஆகும். முந்திய வழிகாட்டல் விதிகளின் அடிப்படையில் இப்பொழுது நடைமுறையில் இருக்கும் கட்டளையில் குறிப்பிட்டுள்ள பிள்ளைக்கான உதவித் தொகையின் அளவு சட்டம் மாறும்பொழுது தானாகவே மாறுவதில்லை.

புதிதாக வந்த வழிகாட்டல் விதிகளின்படி நீங்கள் பெற்றுவரும் பிள்ளைக்கான உதவித்தொகை மாறுமென்றால் உதவித் தொகைக்கான கட்டளையை மாற்றும்படி நீங்கள் நீதிமன்றத்திடம் கேட்கவேண்டும். பிள்ளைக்கான உதவித் தொகையினை நீங்கள் பெற்று வருகிறீர்கள் என்றால் சில வருடங்களுக்கு ஒருமுறை அது பற்றி விசாரித்து, பிள்ளைக்கான உதவித் தொகைக்கான புதிய வழிகாட்டல் விதிகள் வந்துள்ளனவா என்று அறிந்து கொள்ளுங்கள். குடும்பச் சட்டத்திற்கான சட்டத்தரணி ஒருவர் இதில் உங்களுக்கு உதவ முடியும்.

## உங்கள் கடமைகளும் பொறுப்புகளும்

பிள்ளைக்கான உதவித் தொகைக்கு நீங்கள் விண்ணப்பிக்கும் போது. உங்களுக்கு சில உரிமைகளும் கடமைகளும் இருக்கின்றன.

## 1. பணம் செலுத்துபவரின் நிதி நிலைமை தொடர்பாக தகவல்களைப் பெறும் உரிமை

நீங்கள் பிள்ளைக்கான உதவித் தொகைக்கு விண்ணப்பித்து இருக்கிறீர்கள் அல்லது அதனைப் பெற்று வருகிறீர்கள் என்றால் பணம் செலுத்துபவரின் நிதிநிலைமை தொடர்பான உண்மைத் தகவல்களைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. இதனை **நிதிநிலைமை விபர வெளியீடு (financial disclosure)** என்று அழைப்பர்.

பணம் செலுத்துபவர் வழங்கும் பிள்ளைக்கான உதவித் தொகை சரியானது என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக உங்களுக்கு இத்தகவல் தேவைப்படுகிறது. நீங்கள் கேட்டால், ஒவ்வொரு வருடமும் பணம் செலுத்துபவர் தனது வருமானத்தைப் பற்றிய தகவல்களை உங்களுக்குக் கட்டாயம் வழங்க வேண்டும்.

சில சமயங்களில் பணம் செலுத்தும் பெற்றார் இந்த விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குவது இல்லை. அத்துடன் அவர் பின்வருமாறு செய்யக்கூடும்:

- நீங்கள் கேட்கும் தகவல்களை உங்களுக்குத் தராமல் விடலாம், அல்லது;
- பிள்ளைக்கான உதவித்தொகை செலுத்துவதைத் தவிர்ப்பதற்காக வேலையற்று இருக்க முயற்சிக்கலாம், அல்லது அதிக சம்பளம் கொடுக்காத ஒரு வேலையில் பணிபுரியக்கூடும்.

இவ்வாறு நிகழுமானால், பணம் செலுத்துபவரால் மேலும் கூடுதலாகச் சம்பாதிக்க முடியும் என்றாலும் அவர் அதைச் செய்யாமல் இருப்பதைத் தெரிவுசெய்திருக்கிறார் என்பதை நீதிமன்றம் நம்பும்படி நீங்கள் காட்ட வேண்டும். அவரது வருமானம் எந்த அளவு இருக்கிறது அல்லது இருக்கவேண்டும் என்று நீதிமன்றம் மதிப்பிட முடியும். பணம் செலுத்தும் பெற்றோரின் **வருமானத்தை மதிப்பிடல் (imputing)** என்று இது அழைக்கப்படும். என்ன தொகை பிள்ளைக்கான உதவித் தொகையாக உங்களுக்கு கிடைக்க வேண்டும் என்று தீர்மானிப்பதற்கு இவ்வாறு மதிப்பிட்ட வருமானத்தின் அளவை நீதிமன்றம் பயன்படுத்தலாம்.

## 2. சமூக உதவித் திட்டத்தில் இருக்கும் பெற்றோர்

2017 இல், சமூக உதவி (Ontario Works (OW) அல்லது ஒன்ராறியோ வலுவிழப்பு ஆதார திட்டத்தில் (ODSP)) இருக்கும் பெற்றோருக்கு ஒன்ராறியோ அரசாங்கம் பிள்ளை ஆதரவுத் தொகை பற்றிய புதிய விதிகளை அறிமுகப்படுத்தியது.

சமூக உதவி பணம் உங்களுக்குக் கிடைத்தால், OW அல்லது ODSP இலிருந்து பெறும் பணத்தையும் பிள்ளைக்கான உதவித் தொகையையும் நீங்கள் வைத்திருக்கலாம். முன்பு, பிள்ளைக்கான உதவித் தொகை உங்களுக்குக் கிடைக்கிறது அல்லது கிடைக்கலாம் என்றால் சமூக உதவித் தொகையை அரசாங்கம் குறைத்துக் கொடுத்தது. இப்போது அதுவல்ல சட்டம். இருந்தாலும் சமூக உதவித் தொகையையும் நீங்கள் பெறுகிறீர்கள் எனில் பிள்ளைக்கான உதவித் தொகை உங்களுக்குக் கிடைக்கிறது என்பதை நீங்கள் அறிவிக்க வேண்டும்.

சமூக உதவித் திட்டத்தில் இருக்கும் பணம் செலுத்தும் பெற்றோரும், உதவித் தொகை வழிகாட்டல் விதிகளில் உள்ளவாறு சிறிதளவு பணமாவது பிள்ளைக்கான உதவித் தொகையாகக் கட்டவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுவர். பணம் செலுத்துபவரின் வருடாந்த வருமானம் மிகக் குறைவாகத் தெரிந்தாலும்கூட பிள்ளைக்கான உதவித்தொகையை அவர் வழங்கவேண்டும் என்று எதிர்பார்க்கப்படலாம்.

ஒன்ராறியோ அரசாங்கம் எல்லை ஒன்றை நிர்ணயிக்கின்றது, அந்த எல்லைக்குக் கீழ் சம்பாதிக்கும் பெற்றோர் பிள்ளைக்கான உதவித் தொகையைச் செலுத்த வேண்டியதில்லை. பிள்ளைக்கான உதவித் தொகையைச் செலுத்த வேண்டிய வருமான எல்லைக்கு கீழ் உங்கள் பங்காளர் இருக்கின்றாரா என எப்படி அறிவது என்பது பற்றிச் சமூக உதவி அலுவலகம் ஒன்றை அல்லது சட்டத்தரணி ஒருவரை நீங்கள் கேட்கலாம்.

## ஆதரவுக் கட்டளைகள் எப்படி அமுல் செய்யப்படுகின்றன?

பிள்ளைக்கான உதவித் தொகைக் கட்டளைகள் **குடும்ப பொறுப்பதிகாரப் பணியகத்தினால் (Family Responsibility Office** (FRO)**)** அமுலாக்கப்படுகின்றன. FRO என்பது மாகாண அரசின்கீழ் உள்ள ஒரு காரியாலயம் ஆகும். பிள்ளைக்கான உதவித் தொகைக்கான நீதிமன்றக் கட்டளை ஒவ்வொன்றும் இப்பணியகத்தில் சுயமுறையில் தானாகவே பதிவாகிறது. உங்களுடைய உதவித் தொகைக் கட்டளையை FRO அமுலாக்குவதை நிறுத்துவதற்கு **உதவித் தொகை பெறுபவர்** ஒப்புதல் கொடுக்க வேண்டும்.

பிள்ளைக்கான உதவித் தொகை சம்பந்தமாக உங்களுக்கும் உங்கள் முன்னைய வாழ்க்கைத் துணைவருக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று இருப்பதுடன், FRO அதை அமுலாக்க வேண்டுமென விரும்பினால், முதலில் நீதிமன்றத்துடன் அந்த ஒப்பந்தத்தைத் தாக்கல் செய்ய வேண்டும். பின்னர் அவர்கள்

அமுல் செய்வார்கள் என்பதை எப்படி உறுதிசெய்வது என அறிய நீங்கள் FRO ஐத் தொடர்பு கொள்ள முடியும்.

## FRO பணியகம் எப்படிச் செயல்படுகிறது?

பணியகத்தில் ஓர் உதவித் தொகைக்கான நீதிமன்ற உத்தரவு பதிவு செய்யப்பட்டதும், உதவித் தொகைக்கான எல்லாப் பணக் கொடுப்பனவுகளையும் மற்றப் பெற்றோர் FRO பணியகத்துக்கு அனுப்பவேண்டும். FRO பணியகத்தில் பணம் கிடைத்தும், அதனை அது உங்களுக்கு அனுப்பி வைக்கும்.

FRO பணியகத்தில் பல கோவைகள் இருந்து வருகின்றன. இப்பணியகம் மிகுந்த வேலைப் பழுவுடன் இயங்கும் காரணத்தால், உத்தரவைப் பதிவு செய்த பின்னர் உதவித் தொகைப் பணம் உங்களுக்கு வரத் தொடங்க பல மாதங்கள் நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கலாம். பணம் செலுத்துபவரின் வருமானம் அல்லது ஏனைய சொத்துப் பற்றிய தகவல்கள் FRO இடம் இல்லாவிட்டால் பணத்தை நீங்கள் பெறுவதற்கு அதிக காலம் எடுக்கலாம்.

## பணம் செலுத்துபவர் பணம் செலுத்தத் தவறினால் என்ன நடக்கும்?

சில சமயங்களில் பணம் செலுத்துபவர் பணம் செலுத்தத் தாமதம் ஆகலாம், அல்லது ஒரு கொடுப்பனவைச் செலுத்தத் தவறலாம். பணத்தை அறவிடுதற்கு FRO பணியகம் கையாளும் முறை இப்படி இருக்கலாம்:

- பணம் செலுத்துபவர் வேலை செய்கிறார் என்றால், அவரது சம்பளத்தில் இருந்து பிள்ளைக்கான உதவித் தொகைப் பணத்தை FRO பணியகத்துக்கு அனுப்பும்படி அவருக்கு வேலை வழங்குபவருக்கு FRO பணியகம் உத்தரவிட முடியும். **பணத்தை அறவிடல் (garnishing wages)** என்று இது அழைக்கப்படுகிறது.

- பணம் செலுத்துபவர் வேலையற்று இருக்கிறார் அல்லது சுயமாகத் தொழில் செய்கிறார் என்றால், பணம் செலுத்துபவரது வங்கிக் கணக்கில் இருந்து FRO பணியகம் பணத்தினை எடுக்க முயற்சிக்கலாம். வங்கிக் **கணக்கிலிருந்து அறவிடல்** என்று இது அழைக்கப்படுகிறது. அவருடைய சொந்தச் சொத்தாக இருக்கும் வாகனம் அல்லது வீடு போன்றவற்றின் மீது **உரிமைக் கோரிக்கை (lien)** ஒன்றையும்

FRO பணியகம் விதிக்க முடியும். அச்சொத்தினை அவர் விற்க முயலும்பொழுது உங்களுக்குப் பணம் செலுத்துபவர் செலுத்தவேண்டி இருக்கும் தொகையை FRO எடுத்துக்கொள்ளும்.

- பணம் செலுத்துபவர் எப்பொழுதும் தாமதித்து பணத்தைக் கட்டினால், அல்லது பிள்ளை ஆதார உதவித் தொகையாகக் கட்டாத பெருந்தொகையை நிலுவையில் வைத்திருந்தால், நாணயநிலைப் பணியகத்துக்கு (credit bureau) பணம் செலுத்துபவர் பற்றி அறிவித்தல், அவரது வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை அல்லது கடவுச்சீட்டை இடைநிறுத்தி வைத்தல். அல்லது சிறையில் அடைத்தல் மூலம் FRO பணியகம் பணத்தைக் கட்டும்படி அவரை நிர்ப்பந்திக்க முடியும்.
- வரி மீள்கொடுப்பனவு (tax refund) அல்லது தொழில் காப்புறுதி நன்மைகள் (employment insurance benefits) போன்றவற்றுக்காக பணம் செலுத்துபவருக்கு அரசாங்கம் கொடுக்கவேண்டி உள்ள தொகையிலிருந்து பிள்ளை ஆதார உதவித் தொகை கட்டுவதற்கான பணத்தையும் FRO பணியகம் எடுத்துக் கொள்ள முடியும்.
- பிள்ளை ஆதார உதவித் தொகையைச் செலுத்தாமைக்காக, நாணயநிலைப் பணியகத்துக்கு (credit bureau) பணம் செலுத்துபவர் பற்றி FRO அறிவிக்க முடியும். பணம் செலுத்துபவர் பிள்ளைக்கான உதவித் தொகையை ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேலாகச் செலுத்தவில்லை அத்துடன் அவரை FRO ஆல் கண்டறிய முடியவில்லை என்றால், அவரைப் பற்றிய தனிப்பட்ட தகவல்களை அது பணம் செலுத்தாத பெற்றோர் பற்றிய வலைத்தளத்தில் இட முடியும். இதைச் செய்வதற்கு முதல் பணம் பெறும் பெற்றோரின் ஒப்புதலை FRO பெற்றுக்கொள்ளும்.

## முதல்குடி மக்களுக்கு விசேட விதிமுறைகள் உள்ளன.

பணம் செலுத்தும் பெற்றோர் மத்திய அரசு இந்தியன் சட்டத்தின் கீழ் (*Indian Act*) இந்தியன் நிலையில் (Status Indian) இருந்தால், சில சந்தர்ப்பங்களில் பிள்ளைக்கான உதவித் தொகைக்கான நீதிமன்ற உத்தரவை FRO எப்படி அமுல்படுத்தலாம் என்பதை மத்திய அரசுச் சட்டம் கட்டுப்படுத்தும்.

- பணம் பெறுபவர் (பிள்ளை அல்லது பெற்றோர்) இந்தியன் நிலையிலும் (Status Indian) பணம் செலுத்துபவர் இந்தியன் நிலை (Status Indian) அற்றவராகவும் இருந்தால், பிள்ளை மற்றும் துணைவர் ஆதரவு உத்தரவுகளை அமுல்படுத்த அனைத்து விதிமுறைகளையும் FRO பிரயோகிக்கலாம்.
- பணம் செலுத்துபவர் இந்தியன் நிலையிலும் (Status Indian) பணம் பெறுபவர் (பிள்ளை அல்லது பெற்றோர் இந்தியன் நிலை (Status Indian) அற்றவராகவும் இருந்தால், அவருடைய நிலத்துக்கு அப்பால் உள்ள சொத்துக்களுக்கு அல்லது சம்பாதித்த பணத்துக்கு மட்டுமே அந்த விதிமுறைகளை FRO பிரயோகிக்கலாம். நிலத்தில் உள்ள சொத்துக்களில் அல்லது சம்பாதித்த பணத்திலிருந்து பணத்தைக் கட்டும்படி FRO வற்புறுத்த முடியாது. ஆனால், ஆதரவுத் தொகையை செலுத்தாதற்காக நாணயநிலைப் பணியகத்துக்கு (credit bureau) பணம் செலுத்துபவர் பற்றி அறிவித்தல், அவரது வாகன ஓட்டுநர் அனுமதிப் பத்திரம் மற்றும் கடவுச்சீட்டை இடைநிறுத்தி வைத்தல் மற்றும் சிறையில் அடைத்தல் போன்ற ஏனைய முறைகள் மூலம் ஆதரவு உத்தரவுகளை FRO அமுல்படுத்தலாம்.

உதவித்தொகையை காலதாமதமாகத் தருகிறார், அல்லது பணம் செலுத்தவில்லை என்ற காரணத்தால் உங்கள் பிள்ளையை அணுகும் உரிமையை பணம் செலுத்தும் பெற்றோருக்கு நீங்கள் **மறுக்க முடியாது** என்பதை நீங்கள் அறிந்திருத்தல் முக்கியம். உங்கள் பிள்ளையின் பாதுகாப்புக் கருதி நீங்கள் பயப்பட்டால் மட்டுமே சட்ட உரிமையுள்ள அவர் பார்ப்பதற்கு நீங்கள் அனுமதி மறுக்கலாம். அப்படியான நிலைமையில் நீங்கள் உடனடியாக உதவி பெறவேண்டும். உங்களுக்கான வழிகள் பற்றி ஒரு சட்டத்தரணியிடம் கதைக்கலாம். அவசர நிலைமையின் கீழ் 911 என்ற இலக்கத்தில் காவல் துறையினரை அழையுங்கள்.

## பணம் செலுத்துபவர் ஒன்ராறியோவில் வசிக்கவில்லை என்றால் என்ன நடக்கும்?

கனடாவில் அல்லது ஐக்கிய அமெரிக்காவில் எங்கிருந்தாலும் பணம் செலுத்தும் பெற்றோரிடம் இருந்து உதவித் தொகையினை அறவிடுதற்கு FRO பணியகம் உங்களுக்கு உதவமுடியும். எல்லைகளைக் கடந்து FRO பணியகம் மற்றும் அது போன்ற காரியாலயங்கள் உதவித் தொகையைப் பெற்றெடுக்க அனுமதிக்கும் ஒப்பந்தத்தில் எல்லா மாகாணங்களும் மாநிலங்களும் கையெழுத்து இட்டுள்ளபடியால் இது சாத்தியம் ஆகிறது. பேர்முடா, கானா, ஹொங்கொங், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளுடனும் ஒன்ராறியோ மாகாணம் இதுபோன்ற ஒப்பந்தங்களைச் செய்துள்ளது

ஒன்ராறியோவுடன் ஒப்பந்தம் செய்திருக்காத ஒரு நாட்டில் பணம் செலுத்தும் பெற்றவர் வாழுகிறார் என்றால், அந்தப் பணம் செலுத்தும் பெற்றோருக்கு ஒன்ராறியோவில் வருமானம் அல்லது சொத்து இருப்பது பற்றிய தகவல்கள் உங்களிடம் இருந்தாலேயன்றி, உதவித் தொகைக்கான உத்தரவை நிறைவேற்றுவதில் FRO பணியகம் உங்களுக்கு உதவ முடியாது. இல்லாவிடில், நீங்கள் உதவித் தொகையை அறவிடுதற்கு பணம் செலுத்துபவர் வாழும் நாட்டுக்குரிய சட்டங்களைப் பயன்படுத்துவதே ஒரே ஒரு வழி ஆகும். இதனைச் செய்வதற்கு ஒரு சட்டத்தரணி உங்களுக்கு உதவக் கூடும்.

*நெருக்கமான உறவு ஒன்று முடிவுக்கு வரும்பொழுது வன்முறைக்கான ஆபத்து அதிகளவில் இருக்கிறது. உங்களுக்கு உடனடியாக ஆபத்து நேரிடும் நிலைமை இருந்தால் 911 தொலைபேசி இலக்கத்தை அழையுங்கள். நீங்களோ உங்களுக்குத் தெரிந்த ஒருவரோ ஆபத்தை எதிர்நோக்கினால் தகுந்த உதவி பெறுவதற்குரிய தகவல்களைப் பெற FLEW இணையத்தளத்தைப் பாருங்கள்.*

*நீங்கள் பிரெஞ்சு மொழி பேசும் ஒரு பெண்ணாக ஒன்ராறியோவில் வாழ்ந்து வருகிறீர்கள் என்றால் குடும்பச் சட்ட நீதிமன்ற நடைமுறைகளின் பொழுது பிரெஞ்சு மொழியில் சேவைகளைப் பெறுகின்ற உரிமை உங்களுக்கு உண்டு. உங்கள் உரிமைகள் பற்றி நீங்கள் மேலதிக தகவல் பெறுவதற்கு ஒரு சட்டத்தரணி அல்லது ஒரு சமூக சட்ட உதவி நிலையத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்: அல்லது Femaide என்று அழைக்கப்படும் ஆதாரத் தொலைபேசி இணைப்புடன் 1-877-336-2433 என்ற இலக்கத்திலும், செவிப்புலன் குறைந்தவர்களுக்கான 1-866-860-7082 என்ற இலக்கத்திலும், தொடர்பு கொள்ளலாம்.*

*பிரெஞ்சு மொழியில் சேவைகள் பெறுவது எப்படி என்பது பற்றிய மேலதிக தகவலினை www.onefamilylaw.ca அல்லது www.undroitdefamille.ca. என்ற எங்கள் இணையத்தளத்திலும் நீங்கள் பார்க்க முடியும்.*

## குடும்பச் சட்ட விடயங்கள் கிடைக்கின்றன*

1. முரண்பாட்டுக்கான மாற்றீட்டுத் தீர்வு மற்றும் குடும்பச் சட்டம் (TML 001)
2. பிள்ளைப் பாதுகாப்பு மற்றும் குடும்பச் சட்டம் (TML 002)
3. **பிள்ளைக்கான உதவித் தொகை (TML 003)**
4. குற்றவியல் மற்றும் குடும்பச் சட்டம் (TML 004)
5. பிள்ளைப் பாதுகாப்பு மற்றும் அணுகல் (TML 005)
6. குடும்ப ஒப்பந்தங்கள் (TML 006)
7. குடும்பச் சட்ட நடுநிலைமை (TML 007)
8. குடியேறிய, அகதிநிலை மற்றும் தகுதிநிலையற்ற பெண்களுக்கான குடும்பச் சட்டம் (TML 008)
9. உங்களுடைய குடும்பச் சட்ட பிரச்சினைகளுக்கு உதவியைக் கண்டறிதல் (TML 009)
10. குடும்பச் சட்டத்தில் சொத்து பிரிக்கப்படும் விதம் (TML 010)
11. திருமணம் மற்றும் விவாகரத்து (TML 011)
12. துணைவருக்கான ஆதரவு (TML 012)

** இந்தக் கையேடு பல வடிவங்களிலும் மொழிகளிலும் கிடைக்கிறது. மேலதிக தகவல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.onefamilylaw.ca. குடும்பச் சட்டத்தின் கீழ் உங்களுடைய உரிமைகளை நீங்கள் விளங்கிக்கொள்ள உதவும் மேலதிக ஆவணங்களையும் இந்த வலைத்தளத்தில் நீங்கள் கண்டறியலாம்.*

flew Family Law Education for Women
Women's Right to Know

fodf Femmes ontariennes et droit de la famille
Le droit de savoir

The Law Foundation of Ontario

நிதி வழங்கியவர்கள்:
Ontario

இதில் சொல்லப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் FLEW ன் அபிப்பிராயங்கள் ஆகும். இவை மாகாணத்தின் அபிப்பிராயங்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.